SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
இண்டியன்ஆயில் IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

# மாலை எக்ஸ்பிரஸ்

குரோதி வருடம் கார்த்திகை 13 MAALAI EXPRESS ஹிஜிரி 1446 ஜமாதுல் அல்வல் 25
மாநிலம் பயனுற!
● புதுச்சேரி ● வியாழக்கிழமை, நவம்பர் 28, 2024 ● வெளியூர்: 29-11-2024, வெள்ளிக்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 141 ● 6 பக்கம் ● ரூ.6

மல்டிகலர் பைகள்

துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

## நாளை மறுநாள்

# தமிழ்நாட்டில ரெட் அலர்ட்

**சென்னை, நவ. 28–**

வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி, தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும் வலுவடைந்து இலங்கை மற்றும் டெல்டா கடலோரப் பகுதிகளையொட்டி நிலை கொண்டு இருந்தது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் மீண்டும் கனமழை பெய்ய தொடங்கி உள்ளது. இதன்படி நாகூர், வேளாங்கண்ணி, தலைஞாயிறு, வேதாரண்யம் உள்ளிட்ட பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது.

கடந்த 4 நாட்களாக பெய்து வந்த மழை நேற்றிரவில் இருந்து குறைந்திருந்தநிலையில் தற்போது மீண்டும் கனமழை கொட்ட தொடங்கி உள்ளது. வங்கக்கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் நகராமல் ஒரே இடத்தில் மையம் கொண்டுள்ளநிலையில் தற்போது நாகையில் கனமழை பெய்து வருகிறது.

தற்போதைய நிலைவரப்படி, நாகப்பட்டினத்துக்கு தென்கிழக்கே 310 கி.மீ. தூரத்தில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நிலைக் கொண்டுள்ளதாக தகவல் தெரிவிக் கப்பட்டுள்ளது. வங்கக்கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் மீண்டும் நகராமல் அதே இடத்தில் நீடிப்பதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.


கடந்த சில மணி நேரங்களாக மணிக்கு 2 கிலோ மீட்டர் வேகத்தில் நகர தொடங்கி இருந்தநிலையில் தற்போது மீண்டும் அதே இடத்தில் நீடிப்பதாக கூறப்பட்டுள்ளது. தற்போதைய நிலைவரப்படி, சென்னைக்கு தென் கிழக்கே 480 கி.மீ. தூரத்திலும் தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலம் நிலைக் கொண்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

சென்னை மற்றும் டெல்டா மாவட்டங்களில் இன்று இரவு வரை மிதமான மழை பெய்யும் என்றும், பகலில் குளிர்ந்த காற்று வீசும் என்றும், இந்த கணிப்பில் என்ற மாற்றமும் இல்லை என்றும் தனியார் வானிலை ஆய்வாளர் பிரதீப் ஜான் தகவல் தெரிவித்துள்ளார். மேலும் நாளை (நவ., 29) மற்றும் நாளை மறுநாள் (நவ., 30) சென்னை, கடலூர், விழுப்புரம், கடலோரப் பகுதிகளில் கனமழையை எதிர்பார்க்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்யும் என வானிலை மையம் எச்சரிக்கை விடுத்திருந்தது. அதன்படி ராமநாதபுரத்தில் கடந்த 2 நாட்களாக இடைவிடாது மழை பெய்து வருகிறது. இதனால் தாழ்வான பகுதிகளில் மழைநீர் குளம்போல் தேங்கி நிற்பதுடன் வீடுகளையும் தண்ணீர் சூழ்ந்தது. குடியிருப்பு வாசிகள் வீட்டைவிட்டு வெளியே வர முடியாமல் அவதியடைந்தனர். சாலையில் தேங்கிய மழைநீரால் வாகன ஓட்டிகள் சிரமம் அடைந்தனர்.

இந்நிலையில் பாம்பனில் 3வது நாளாக கடல் சீற்றமாக காணப்படுகிறது. இதனால் மண்டபம்பகுதியை சேர்ந்த குடியிருப்பு வாசிகள் அச்சத்தில் இருந்து வருகின்றனர். தமிழகத்தில் 10 மாவட்டங்களில் மதியம் 1 மணி வரை மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

### பெங்கல் புயல் உருவாக வாய்ப்பு




இடி, மின்னலுடன் கூடிய லேசான/மிதமான மழை

கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, தஞ் சாவூர், திருவாரூர்.

லேசான மழை: செங்கல்பட்டு, விழுப்புரம், சென்னை, காஞ்சிபுரம்.

தமிழ்நாட்டில் வரும் 30ம் தேதி ஓரிரு இடங்களில் அதி கனமழைக்கு வாய்ப்புள்ளதால் (21 செ.மீ) ரெட் அலர்ட் விடுக்கப்படுவதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.

மேலும் இன்று மாலை முதல் நாளை காலை வரை தென்மேற்கு வங்கக்கடலில் மணிக்கு 85 கி.மீ. காற்றின் வேகம் கொண்ட ஆழமான காற்றழுத்த தாழ்வு மண்டலம் ஒரு சூறாவளி புயலாக மாற வாய்ப்பு உள்ளது என்றும் கூறி இருக்கிறது.

இந்த புயலானது பின்னர் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறி வரும் 30ம் தேதி காலை காரைக்கால் மற்றும் மகாபலிபுரம் இடையே வட தமிழ்நாடுபுதுச்சேரி கடற்கரையை கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக் கடலில் புயல் உருவாவது மேலும் தாமதமாகி உள்ளது. இதனிடையே ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் அடுத்த 12 மணி நேரத்தில் புயலாக உருவாகக் கூடும் என வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

இதனிடையே இந்த புயல் வலுஇழந்து ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறி வரும் 30ம் தேதி (நாளை மறுதினம்) காரைக்கால் மாமல்லபுரம் இடையே கரையைக் கடக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இன்று இரவு முதல் மழை படிப்படியாக அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் வட தமிழக கடலோரப் பகுதிகளில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று கூறப்படுகிறது.

நாளை சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், புதுச்சேரி, கடலூர், மயிலாடுதுறையில் கனமழைக்கு வாய்ப்புள்ளது என்றும் நாளை மறுநாள் நாகை, காரைக்காலில் கனமழைக்கு வாய்ப்புள்ளது என்றும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக உருவாக உள்ளநிலையில் சென்னை மற்றும் நாகையில் பலத்த காற்று மணிக்கு 4050 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கக்கடலில் புயல் சின்னம் காரணமாக புதுச்சேரியில் கடல் சீற்றமாக காணப்படுகிறது. இதனிடையே புதுச்சேரி கடற்கரைக்கு பொதுமக்கள் செல்லக் கூடாது என்று அம்மாநில முதல்அமைச்சர் ரங்கசாமி அறிவுறுத்தி உள்ளார். காவல்துறையினர் அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு, அத்துமீறி கடற்கரைக்கு செல்வோரை எச்சரித்து வருகின்றனர்.

நாகையில் நம்பியார் நகர் உள்ளிட்ட கடற்கரைப்பகுதிகளில் கடல் சீற்றத்துடன் காணப்படுகிறது. இதனைத்தொடர்ந்து கடற்கரைப்பகுதிகளுக்கு மக்கள் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஆபத்தை உணராமல் மக்கள் கடற்கரையில் குவிந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

பெங்கல் புயலால் பாதிக்கப்படும் பகுதிகளில் மீட்பு நடவடிக்கையை செய்ய தயார்நிலையில் உள்ளதாகவும், பாதிக்கப்படும் பகுதிகளுக்கு தேவையான உதவிகளை வழங்க தயாராகி வருவதாகவும் இந்திய கடற்படை தெரிவித்துள்ளது.

இதன்படி மாநில அரசு மற்றும் அதிகாரிகளுடன் இணைந்து மீட்புப்பணிகளை செய்ய தயார் நிலையில் உள்ளதாகவும், உணவு, குடிநீர், மருந்துகள் உள்ளிட்ட பொருட்கள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் வெள்ளநிவாரண குழுக்கள், டைவிங் குழுக்கள் உள்ளிட்டவையும் தயார்நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கக் கடலில் புயல் உருவாவது மேலும் தாமதமாகி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதனிடையே ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் அடுத்த 12 மணி நேரத்தில் புயலாக உருவாகக் கூடும் என வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. கடந்த சில மணி நேரங்களாக நகராமல் நின்றிருந்த தாழ்வு மண்டலம் தற்போது மணிக்கு 2 கிலோ மீட்டர் வேகத்தில் நகரத் தொடங்கி உள்ளது. இதன்படி, புதுச்சேரிக்கு தென் கிழக்கே 410 கி.மீ. தூரத்திலும், சென்னைக்கு தென் கிழக்கே 480 கி.மீ. தூரத்திலும் தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலம் நிலைக் கொண்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்களவையில் வயநாடு எம்.பி.யாக பதவியேற்றார் பிரியங்கா காந்தி



**புதுடெல்லி, நவ, 28–**

வயநாடு மக்களவைத் தொகுதியில் போட்டியிட்ட ராகுல் காந்தி, தனது எம்.பி. பதவியை ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, இடைத் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளராக பிரியங்கா காந்தி நியமிக்கப்பட்டார். இதன்படி காங்கிரஸ் வேட்பாளராக பிரியங்கா காந்தி, பாஜக வேட்பாளராக நவ்யா அரிதாஸ், இடதுசாரி கூட்டணியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு வேட்பாளராக சத்யன் மெகோரி களமிறங்கினர். இந்த சூழலில் வயநாடு இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் கடந்த 23ம் தேதி எண்ணப்பட்டது. இதில் வயநாடு மக்களவை தொகுதியில் 4 லட்சத்திற்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் பிரியங்கா காந்தி வெற்றி பெற்றுள்ளார். போட்டியிட்ட முதல் தேர்தலிலேயே இந்த மகத்தான வெற்றியை பிரியங்கா காந்தி சாத்தியமாக்கி உள்ளார்.

இந்நிலையில், இன்று காலை 11 மணிக்கு கூடிய மக்களவையில் வயநாடு தொகுதி எம்.பி.யாக பிரியங்கா காந்தி பதவியேற்றார். அரசியலமைப்பு புத்தகத்தை கையில் ஏந்தியவாறு பிரியங்கா காந்தி பதவியேற்றுக் கொண்டார். பிரியங்கா காந்திக்கு மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

முன்னதாக, வயநாடு தொகுதியில் வெற்றி பெற்றதற்கான சான்றிதழை டெல்லியில் பிரியங்கா காந்தியிடம் கேரள காங்கிரஸ் தலைவர்கள் இன்று வழங்கினர். இந்த சம்பவத்தின் போது, அவர்களுடன் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியும் உடனிருந்தார். அப்போது பிரியங்கா காந்திக்கு ராகுல் காந்தி இனிப்பு வழங்கி உபசரித்தார். தன் மீது நம்பிக்கை வைத்து தனக்கு ஆதரவு அளித்த வயநாடு மக்களுக்கு பிரியங்கா காந்தி நன்றி தெரிவித்தார்.

## எதிர்கால சவால்களை சந்திக்கும் திறன் இந்திய ராணுவ வீரர்களிடம் உள்ளது: ஜனாதிபதி திரவுபதி முர்மு

**ஊட்டி, நவ. 28–**

டெல்லியில் இருந்து விமானம் மூலம் கோவை வந்த அவர், பின்னர் கார் மூலமாக ஊட்டி ராஜ்பவனுக்கு சென்றார். நேற்று அங்கேயே தங்கி ஓய்வெடுத்தார்.

ஜனாதிபதி திரவுபதி முர்மு இன்று காலை ஊட்டி ராஜ்பவனில் இருந்து கார் மூலம் குன்னூர் வெலிங்டன் ராணுவ பயிற்சி கல்லூரிக்கு சென்றார். அங்கு அவருக்கு ராணுவ வீரர்கள் குதிரை படைகளுடன் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.




வரவேற்பு முடிந்ததும் ராணுவ பயிற்சி கல்லூரிக் குள் சென்ற ஜனாதிபதி, போரில் உயிர் நீத்த ராணுவ வீரர்களின் நினைவு சின்னத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். அதனை தொடர்ந்து, ராணுவ பயிற்சி கல்லூரியில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

அப்போது அங்கு அவர் ராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். நிகழ்ச்சியில் ஜனாதிபதி திரவுபதி முர்மு பேசியதாவது: ராணுவம் உள்பட பல்வேறு துறைகளிலும் நமது நாடு வளர்ந்து வருகிறது. பல்வேறு புதிய தொழில் நுட்பங்கள் மூலம் ராணுவ தளவாட உற்பத்தியில் நாம் முன்னேற்றம் அடைந்துள்ளோம். எதிர்காலத்தில் ஏற்படும் சவால்களை சந்திக்கும் திறன் நமது ராணுவ வீரர்களுக்கு உண்டு. இவ்வாறு அவர் பேசினார்.

## சாலை விபத்தில் உயிரிழந்த பெண் காவலரின் குடும்பத்தினருக்கு நிதியுதவி: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

**சென்னை, நவ. 28–**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

புதுக்கோட்டை மாவட்டம், மண்டையூர் காவல் நிலையத்தில் பெண் காவலராகப் பணிப்புரிந்துவந்த விமலா (வயது 28) க/பெ.மணிகண்டன் என்பவர் இன்று (28.11.2024) காலை 09.30 மணியளவில் புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர், பள்ளத்துப்பட்டியிலிருந்து பணி நிமித்தமாக புதுக்கோட்டை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது பின்புறமாக வந்த நான்குசக்கர வாகனம் எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் பெண் காவலர் விமலா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்



என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையுமடைந்தேன்.

பெண் காவலர் விமலா உயிரிழப்பு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

விமலாவை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு ரூ.25 லட்சம் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பிறவாமை அருளும் அகத்தியரின் ஆத்ம காயத்ரி மந்திரம்

ஓம் அகத்து ஈசாய வித்மஹே
கால ஹஸ்தாய தீமஹி
தந்நோ சர்வப் ப்ரசோதயாத்.
பொருள்: எனது ஆன்மாவே, நீபரமாத்மாவினை சென்றடைய வேண்டிய காலம் உதித்துள்ளது நீ விழிப்படைவாயாக...
தினமும் காலையும் மாலையும் குறைந்தது 27 முதல் 108 முறை 48 நாட்கள் உரைத்தால் கீழ்கண்ட பலன்கள் கிட்டும்..
உங்கள் வேண்டுதல் நிறைவேறும்
1) நோய்கள் குணமாகும் (மௌனமாக உரைத்தால்)
2) பிறவாமை நிலை சித்திக்கும் / கர்மவினைகள் கரையும் (ஓசையுடன் உரைத்தால்)
3) கணவன் மனைவி ஒற்றுமை குடும்ப அமைதி கிடைக்கும் (குடும்பத்தில் அனைவரும் சேர்ந்து உரைத்தால்)
4) உங்கள் உயிருக்கு உணவாகிறது; பிரபஞ்ச ஆற்றல் ஈர்க்கப்படும்.
பிரளய அழிவுகளிலிருந்து காக்கப்படுவீர்
9789032199 7996774757
www.anbaalayam.com

# வில்லியனூர் தொகுதி வளர்ச்சி பணிகள் குறித்து பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளருடன்

## எதிர்க்கட்சித் தலைவர் சிவா ஆலோசனை



புதுச்சேரி, நவ. 28-

புதுச்சேரி மாநிலம் வில்லியனூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் பொதுப்பணித்துறை மூலம் நடைபெற உள்ள பணிகள் குறித்து பொதுப்பணித்துறை தலைமை அலுவலகத்தில் தலைமைப் பொறியாளர் தீனதயாளன் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான இரா. சிவா கலந்து கொண்டார்.

அப்போது, வில்லியனூர் கஸ்தூரிபாய் காந்தி திருமண மண்டபம் புதிதாக கட்டுதல், சுல்தான்பேட்டை குளம் புதிதாக சீரமைப்பு, மூர்த்தி நகர், பாண்டியன் நகர் சாலை மற்றும் வாய்க்கால்கள் ஏஎப்டி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் உத்திரவாகினிபேட், பெரிய பேட், அம்பேத்கர் நகர், எஸ் எஸ் நகர், கரையான்பேட் பகுதிகளில் பணிகளுக்கான டெண்டரை விரைவாக செயல்படுத்துவது மற்றும் ஜி. என். பாளையம், ஆத்துவாய்கால் பேட், பாலாஜி நகர், சிவகிரி நகர், செட்டிகுளம் ஆகிய பகுதிகளில் சிறு பாலங்கள் அமைப்பது சம்பந்தமாக பல முக்கிய பணிகள் விரைவாக செய்வது குறித்து பேசி முடிவெடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர்கள் ராதாகிருஷ்ணன், உமாபதி, சுந்தரமூர்த்தி, மல்லிகா மற்றும் திமுக நிர்வாகிகள் சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் ஹாலித், இலக்கிய அணி துணை அமைப்பாளர் கலிமுல்லா, பொருளாளர் கந்தசாமி, ஜனா ஆகியோர் உடன் இருந்தனர்.

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா





இராமநாதபுரம், நவ. 28-

இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாச்சா முத்துராமலிங்கம் ஆலோசனையின் பேரில் ராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மகனும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலினின் பிறந்த நாளை முன்னிட்டு இனிப்புகள் வழங்கியும், அன்னதானம் செய்தும் கொண்டாடி வருகின்றனர் .

உச்சிப்புளியில் நடைபெற்ற பிறந்தநாள் விழாவில் மண்டபம் மத்திய ஒன்றிய தி.மு.கழகச் செயலாளர் முத்துக்குமார் தலைமையில் இனிப்புகள் வழங்கியும் அன்று மாலை வாலாந்தரவை செஸ்ட் இன் முதியோர் பராமரிப்பு இல்லத்தில் அன்னதானம் வழங்கி பிறந்த நாள் விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மத்திய ஒன்றிய கழக அவைத் தலைவர் நாகராஜன் ,ஒன்றிய துணைச் செயலாளர் சந்திரமோகன்,ஒன்றிய பொருளாளர் தங்கவேலு, உச்சிப்புளி நகர் செயலாளர் சுகுமார், ஆரோக்கியா பாலா, ஒப்பந்ததாரர் ரவி, சுந்தரமுடையான் கிளை ஒன்றிய பிரதிநிதி உதயகுமார், சாத்தக் கோண் வலசை இளைஞர் அணி நாகேந்திரன் (எ) கோபி, செல்ல ரவீந்திரன் ,சக்திவேல், புதுநகரம் கிளைச் செயலாளர் ஜாகீர், தகவல் தொழில்நுட்ப அணி உதயா, உச்சிப்புளி பாக்கியராஜ், இருமேனி கிளைச் செயலாளர் இக்பால் ,சாலை வலசை கிளைச் செயலாளர் தில்லை ராஜா, அழகன்குளம் நாடார்வலசை கிளைச் செயலாளர் அறிவழகன் மற்றும் ராஜேஸ் ,இருமேனி ஐடி விங் அகமது யாசின், துத்திவலசை மங்களநாதன், தொண்டர் அணி அமைப்பாளர் என் எஸ் பாலா ,தகவல் தொழில்நுட்ப அணி சமூக வலைதளம் முகவை பார்த்திபன். உச்சிப்புளி முருகன், துத்திவலசை லட்சுமணன் , பிரப்பண் வலசை கிளைச் செயலாளர் கணேசன், இளைஞர் அணி மகேஷ் குமார், ஆக்டாவலசை செயலாளர் சரவணன், மரவட்டி வலசை கிளைச்சியாளர் களஞ்சியம், மற்றும் திவாகர் நொச்சுரணி இளைஞர் அணி குகன் , என் மனம் கொண்டான் நாசர் ,புதுநகரம் மைதீன், சாத்தகோண் வலசை பாண்டி, ராகவானந்தம், விஸ்வநாதன், ஒன்றிய பிரதிநிதி கருப்பையா ,என் மனம் கொண்டான் அப்துல் ரகுப் ,அழகத்தாவலசை கிளைச் செயலாளர் மாரிமுத்து . மற்றும் மத்திய ஒன்றிய கழக இளைஞர் அணி அமர்நாத், அஜித்குமார், காமேஷ் ,திவாகர் உட்பட மத்திய ஒன்றிய கிளை நிர்வாகிகள் கிளைக் கழக செயலாளர் மற்றும் பிரதிநிதிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா



சேலம், நவ. 28 -

திமுக மாநில இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு சேலம் மத்திய மாவட்டம் மெய்யனூர் பகுதி 23 வது கோட்டத்தின் சார்பாக கழக கொடியினை ஏற்றி வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் செயலாளர் அன்பழகன் தலைமை தாங்கி நடத்தினார். இதில் வார்டு கவுன்சிலர் சிவகாமி அறிவழகன் கழக கொடியினை ஏற்றி வைத்து, பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கழக முன்னோடிகள், இளைஞர் அணி, மாணவரணி, மகளிர் அணி, கழக சார்பணி நிர்வாகிகள் , கழக உடன்பிறப்புகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம்



மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் அனைத்து துறை அலுவலர்களுடன் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. உடன் மாநகராட்சி ஆணையாளர் எஸ்.ராமமூர்த்தி, மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மலர்விழி. மவாட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) மகாராஜா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

# தீபத்திருவிழாவை முன்னிட்டு அடிப்படை வசதிகள் அமைப்பது குறித்து ஆய்வுக்கூட்டம்



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திருக்கார்த்திகை தீபத்திருவிழா 2024 முன்னிட்டு குடிநீர், கழிவறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அமைப்பது குறித்து துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மணி மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# பரதராமி பேருந்து நிலையத்தை மறுசீரமைப்பது குறித்து ஆட்சியர் ஆய்வு



வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா.சுப்புலெட்சுமி, குடியாத்தம் ஊராட்சி ஒன்றியம், பரதராமி பேருந்து நிலையத்தை மறுசீரமைப்பது குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி சுபலட்சுமி, ஊரக வளர்ச்சி செயற்பொறியாளர் சீனிவாசன், வட்டார வளர்ச்சி அலுவலர் சரவணன் உட்பட பலர் உடனிருந்தனர்.

# வணிக வளாகம் கட்ட தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தை ஆட்சியர் ஆய்வு



நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா நாமக்கல் மாநகராட்சி வார சந்தை வளாகத்தில் பல அடுக்கு வணிக வளாகம் கட்டுவதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

## குடிமை பொருள் வழங்கல் துறை மூலம்

# பொதுமக்களுக்கு வழங்கப்படும் ரேஷன் அரிசி தரமாக உள்ளதா என அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும்

## போக்குவரத்து துறை செயலர் முத்தம்மா அறிவிப்பு



காரைக்கால், நவ. 28–

குடிமை பொருள் வழங்கல் துறை மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் ரேஷன் அரிசி விநியோகம் செய்யும்போது தரம் வாய்ந்ததாக உள்ளதா என அவ்வப்போது ஆய்வு செய்ய வேண்டும். என புதுச்சேரி போக்குவரத்து துறை செயலர் முத்தம்மா அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

புதுச்சேரி போக்குவரத்து மற்றும் ஆதி திராவிடர் நலத்துறை செயலர் முத்தம்மா, நேற்று காரைக்கால் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், அவர் பொறுப்பு வகிக்கக் கூடிய துறை மேம்பாட்டு பணிகள் குறித்து மாவட்ட கலெக்டர் மணிகண்டன் மற்றும் அரசு துறை அதிகாரியுடன் ஆலோசனை நடத்தினார்.

கூட்டத்தில், போக்குவரத்து துறை, மின்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் குடிமை பொருள் வழங்கல் துறை உள்ளிட்ட துறைகளில் மேற்கொள்ளப் பட வேண்டிய நடவடிக்கைகள், நடப்பாண்டிற்கு செயல்படுத்தப்பட்டு வரும் மத்திய மாநில அரசு திட்டங்கள் குறித்தும் விரிவாக ஆலோசிக்கப் பட்டது.

கூட்டத்தின் செயலர் முத்தம்மா பேசியதாவது: குடிமை பொருள் வழங்கல் துறை மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் ரேஷன் அரிசி விநியோகம் செய்யும்போது தரம் வாய்ந்ததாக உள்ளதா என அவ்வப்போது ஆய்வு செய்ய வேண்டும்.அரசு சார்பில் ரேஷன் கடை ஊழியர்களுக்கு விரைவில் சம்பள வழங்க வழிவகை செய்யப்படும். கிராமப் புறங்களில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக இயங்கி வந்த பி.ஆர்.டி சி மினி பேருந்துகளை மீண்டும் இயக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும். ஆதி திராவிடர் நலத்துறை கீழ் செயல் படுத்தப்படும் பாட்கோ திட்டங்களை நடப்பாண்டிற் கான நிதியை முழுமையாக செலவு செய்து, ஆதி திராவிட மக்கள் பயன் பெறும் வகையில் பணிகளை விரைவாக முடிக்க வேண்டும். காரைக்காலில் உள்ள அனைத்து அரசு மாணவ மாணவிகளின் விடுதிகளையும் சீரமைக்க வேண்டும். குடிமை பொருள் வழங்கல் துறை மூலம் என்றார். கூட்டத்தில் துணை கலெக்டர் அர்ஜுன் ராமகிருஷ்ணன், காரைக் கால் அரசு ஆஸ்பத்திரி கண் காணிப்பாளர் டாக்டர் கண்ணகி, காரைக்கால் நல வழித்துறை துணை இயக்குனர் டாக்டர். சிவராஜ்குமார், மின்துறை செயற் பொறியாளர் அனுராதா, செய்தி மற்றும் விளம்பரத்துறை உதவி இயக்குனர் டாக்டர் குலசேகரன் மற்றும் பல்வேறு அரசுத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு வழக்கறிஞர் அணி சார்பில் சட்டப் புத்தகம் வழங்கல்



செஞ்சி, நவ. 28–

செஞ்சி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு வழக்கறிஞர் அணி சார்பில் சட்டப் புத்தகம் மற்றும் இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி கோலாகலமாக நடைபெற்றது.

கழக இளைஞரணி செயலாளரும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அந்த வகையில் விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர் அணி சார்பில் அரசு வழக்கறிஞர் கிருஷ்ணன் ஏற்பாட்டில் சட்டப் புத்தகம் வழங்கும் நிகழ்ச்சி மற்றும் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவரும் செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர் விஜயகுமார் கலந்து கொண்டுபயிற்சி வழக்கறிஞர்களுக்கு சட்டப் புத்தகத்தையும், பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் மணி வண்ணன்,பார் அசோசியேசன் சங்கத் தலைவர் பிரவீன்,அரசு வழக்கறிஞர் தமிழ் செல்வி கர்ணன், மூத்த வழக்கறிஞர்கள் தொண்டூர் சுப்பிரமணியன் அரிகிருஷ்ணன்,பாஸ் அசோசியஸ் சங்க செயலாளர் அசாருதீன்,மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் சுதாகரன், வழக்கறிஞர்கள் சுசில்குமார், அன்புசெல்வன், உத்தரவேலு, ராஜா, ராஜேஷ், தஸ்லீம் பானு ,மலர்விழி,அரவிந்தராஜ், சத்தியசீலன்,உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா



தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் மேயர் நாகரத்தினம் தலைமையில் மாமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் கேக் வெட்டி கொண்டாடினர்.

# மத்திய அரசின் வரி விதிப்பை ரத்து செய்யக்கோரி ஈரோட்டில் நாளை தொழில் வணிக நிறுவனங்கள் கடையடைப்பு



ஈரோடு, நவ. 28–

மதிய அரசின் வரி விதிப்பை ரத்து செய்யக் கோரி ஈரோட்டில் நாளை சுமார் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அனைத்து தொழில் வணிக நிறுவனங்கள் கடையடைப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

கடை வாடகைக்கு 18 சதவீத ஜிஎஸ்டி வரி விதிப்பை கடந்த அக்டோபர் மாதம் 10ம் தேதி முதல் மதிய அரசு அமலாக்கி உள்ளது. இதனால், அனைத்து வணிக நிறுவனத்தினரும் கடும் பாதிப்புக்குள்ளாவார்கள் எனவே, இந்த வரி விதிப்பு முறையை ரத்து செய்யக்கோரி நாளை (29ம் தேதி) ஒரு நாள் கடையடைப்பு போராட்டம் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்புத் தலைவர் ராஜமாணிக்கம் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஒன்றிய அரசின் வாடகைக்கு 18% ஜி.எஸ்.டி. வரி விதிப்பு என்பது சிறு, குறு தொழில்கள் உள்ளிட்ட அனைத்து வகை தொழில்களையும் அழிவுக்கு கொண்டு செல்லும் வகையிலும், அனைத்தையும் கார்ப்ரேட் மயமாக்கும் சூழலை உருவாக்குவதற்கு வழிவகை செய்யும் நிலையிலும் உள்ளது.

மேலும், இது நம் நாட்டின் பாரம்பரிய கூட்டுக் குடும்பத் தொழில் எனும் கட்டுமானத்தையே சிதைவுக்கு வழிவகுக்கும். எனவே, இந்த வரி விதிப்பு முறையை ரத்து செய்ய வலியுறுத்தி ஈரோட்டில் 29ம் தேதி (நாளை) அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பில் உள்ள, டெக்ஸ்டைல், ஆட்டோமொபைல், கட்டுமானம் மற்றும் அனைத்து தொழில் வணிக நிறுவனங்களைச் சேர்ந்த 75 சங்கங்களும் இந்த ஒரு நாள் கடையடைப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.இது தவிர மஞ்சள் மார்கெட்டுக்கும் விடுமுறை அறிவிக்கப் பட்டுள்ளது. சுமார் 20 ஆயிரம் கடைகள் மூடப்பட்டு இப் போராட்டத்தில் பங்கேற்கவுள்ளனர். இவ்வாறு அவர் கூறினார். இந்த செய்தியாளர் சந்திப்பின்போது, கூட்டமைப்பின் பொருளாளர் முருகானந்தம், இணைச் செயலாளர் ஜெப்ரி, நிர்வாகி சிவகுமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா



தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி ஈரோடு மாநகர திமுக சார்பில் பொதுமக்களுக்கு மாநகர செயலாளர் சுப்பிரமணியம் இனிப்பு வழங்கினார்.

# விசிக மாவட்ட செயலாளர் பொறுப்புக்கு விருப்ப மனு



விடுதலை சிறுத்தைகள் கட்சியின் நிர்வாக மறுசீரமைப்பில் கள்ளக்குறிச்சி மேற்கு சங்கராபுரம் சட்டமன்ற தொகுதி மாவட்ட செயலாளர் பொறுப்புக்கு தேவர்.கிள்ளி வளவன் விருப்ப மனு கொடுத்தார்.

# அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 75வது இந்திய அரசியலமைப்பு தின விழா



சிதம்பரம், நவ. 28–

சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 75வதுஇந்திய அரசியலமைப்பு தினத்தை முன்னிட்டு, பல்கலைக்கழக சீனிவாச சாஸ்த்திரி அரங்கின் முன்புறம் பல்கலைக்கழக பேரா.முனைவர் தி. அருட்செல்வி, ஆட்சிக்குழு உறுப்பினர் மற்றும் துணை வேந்தர் ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையை வாசிக்க, முனைவர் எம்.பிரகாஷ், பதிவாளர் (பொ), புலமுதல்வர்கள், துறைத்தலைவர்கள், இயக்குநர்கள்,இணை,துணை இயக்குநர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள்,மக்கள் தொடர்பு அதிகாரி திருநி.ரெத்தினசம்பத் மற்றும் மாணவ, மாணவிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு முகப்புரையை வாசித்தனர்.

# காரைக்கால் திருநள்ளாறில் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கலெக்டர் மணிகண்டன் ஆய்வு



காரைக்கால், நவ. 28-

காரைக்கால் திருநள்ளாறில் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கலெக்டர் மணிகண்டன் ஆய்வுசெய்து அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய அரசுத்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் பெங்கால் புயலாக உருவெடுத்து வருவதால் காரைக்கால் மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக தொடர் கன மழை பெய்து வருகிறது. கனமழையால், கரைக்காலை அடுத்த, கோட்டுச்சேரி, நெடுங்காடு, திரு.பட்டினம் திருநள்ளாறு உள்ளிட்ட பல்வேறு குடியிருப்பு பகுதிகளில், மழைநீர் சூழ்ந்து காணப்படுவதால் பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளாகினர். இதனைத் தொடர்ந்து கலெக்டர் மணிகண்டன், மேற்கண்ட பகுதிகளில் நேரில் சென்று ஆய்வு நடத்தினார். தொடர்ந்து குடியிருப்புகளை சுற்றி தேங்கியுள்ள மழை நீரை உடனடியாக அகற்றுமாறு பொதுப் பணித்துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய சுமார் 70 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அரிசி, காய்கறிகள் மற்றும் மளிகை பொருட்கள் அடங்கிய பையை வழங்கி பேரிடர் மற்றும் மழைக்காலங்களில் பாதுகாப்புடன் இருக்குமாறும், குடிநீரை கொதிக்க வைத்து அருந்துமாறும் மழையில் வெளியில் செல்ல வேண்டாம் எனவும் அறிவுறுத்தினார்.

மழைக்காலம் முடிந்தவுடன் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேவையான அடிப்படை வசதிகள் செய்து தரப்படும் என உறுதி அளித்தார். தொடர்ந்து மேலும் பொதுமக்கள் தொடர் கனமழையால் எங்கெல்லாம் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளார்களோ அவர்களுக்கெல்லாம் தங்கு தடையின்றி சுகாதாரமான உணவு, குடிநீரை வழங்க வேண்டும் எனவும் மருத்துவ தேவைப்படும் முதியவர்கள் மற்றும் குழந்தைகளுக்கு உடனடியாக சிகிச்சை வழங்கவும் சுகாதாரத் துறைக்கு கலெக்டர் மணிகண்டன் அறிவுறுத்தினார். ஆய்வின் போது நகராட்சி செயற்பொறியாளர் லோகநாதன், திருநள்ளாறு தாசில்தார் சண்முக நாதன் மற்றும் அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர். ஆய்வை தொடர்ந்து அரசுத் துறை அதிகாரியுடன் ஆலோசனை நடத்தி புயலை எதிர்கொள்ள எந்நேரமும் முன்னெச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தினார்

# கடந்த கால ஆட்சியில் மக்கள் நலத்திட்டங்கள் எதுவும் செய்யாதவர்கள் தற்போது எங்களை குறை சொல்கின்றனர்

## முதலமைச்சர் ரங்கசாமி குற்றச்சாட்டு



புதுச்சேரி, நவ. 28-

புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி நேற்று நிருபர்களிடம் கூறியதாவது: புதுச்சேரியில் புயல் கரையை கடக்க கூடும் நிலை ஏற்பட்டால், அதனை எதிர்கொள்ளும் வகையில் அரசு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. நிவாரண மையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மழைநீர் தேங்காத வகையில் நீரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அனைத்து துறைகளும் தயார் நிலையில் உள்ளது. கடலுக்குள் மீனவர்கள் சுற்றுலா பயணிகள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. மின்சாரம், குடிநீர் தடையின்றி கிடைக்க ஏற்பாடு செய்துள்ளோம். மழையால் பாதிக்கப்படுபவர்களை தங்க வைக்க நிவாரண முகாம் தயார் நிலையில் உள்ளது.

புதுச்சேரியில் முன்பு போல் எங்கும் தண்ணீர் தேங்குவது கிடையாது. இதற்கு முன் இருந்த ஆட்சிக்கும், தற்போதுள்ள நிலைமையையும் மக்கள் பார்க்கலாம். பேரிடர் மேலாண்மைக்கு தேவையான நிதி உள்ளது. தேவைப்பட்டால் மத்திய அரசிடம் கேட்போம். புதுவையில் தற்போது தரமான சாலை அமைக்கப்பட்டுள்ளது. கொம்பாக்கம், அரும்பார்த்தபுரம் சாலையை பாருங்கள்.

கடந்த ஆட்சியில் உள்ளாட்சித் துறையில் தொகுதி மேம்பாட்டு நிதி ஒரு பைசா கூட வழங்கப்படவில்லை. தற்போது ஒவ்வொரு எம்.எல்.ஏ., வுக்கும் ரூ.2 கோடி கொடுத்துள்ளோம். ஜனவரி முதல் உள்ளாட்சித்துறை வேலைகள் துவங்க உள்ளது.

ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் ரூ.55 கோடி மொத்த டெண்டரில் ரூ.29 கோடி ஊழல் என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகிறது. மீதி தொகையில் எப்படி அடுக்குமாடி குடியிருப்பு, பஸ் நிலையம் கட்ட முடியும். நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

பஸ் நிலைய கட்டுமான பணி முடியும் தருவாயில் உள்ளது. விரைவில் திறக்கப்படும். 56,000 பெண்களுக்கு உதவித் தொகை இந்த ஆட்சியில் கொடுத்துள்ளோம். எல்.டி.சி., யூ.டி.சி., ஆசிரியர், போலீஸ், பொதுப்பணித்துறை என இதுவரை 4,000 பணியிடம் நிரப்பப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சியில் ஒன்றுமே செய்யாதவர்கள் தற்போது எதுவும் நடக்கவில்லை என கூறுவது என்ன அர்த்தம். எதிர்க்கட்சிகள் குறை சொல்வது வழக்கம். ஆனால், அரசு தொடர்ந்து தன் கடமையை செய்து வருகிறது. புதுச்சேரியில் மழை நீர் தேங்கவில்லை. எதிர்க்கட்சிகள் இதுகுறித்து கவலைப்பட தேவையில்லை. கோப்புகளுக்கு கவர்னர் அனுமதி அளிப்பதால்தான், பணிகள் விரைவாக நடக்கிறது. கவர்னர் விழாவில் கலந்து கொள்ளவில்லை எனில் கருத்து வேறுபாடு என கூறுவதா? உப்பனாறு பாலம் பணிகள் ரூ. 29 கோடிக்கு டெண்டர் விடப்பட்டு விரைவில் துவங்க உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

# பள்ளிக்கூடம் அருகில் சிகரெட் விற்பனை செய்த கடையின் உரிமையாளருக்கு அபராதம் விதிப்பு



மதுரை, நவ. 28-

மதுரை தெற்கு வட்டத்திற்குட்பட்ட ஜெய்ஹிந்த்புரம் பகுதியில் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சௌ.சங்கீதா, உங்களை தேடி உங்கள் ஊரில் திட்ட ஆய்வின் போது பள்ளிக்கூடம் அருகில் தடை செய்யப்பட்ட பகுதியில் சிகரெட் விற்பனை செய்த கடையில் சிகரெட்டுகளை சிஓடிபிஏ சட்டத்தின் கீழ் பறிமுதல் செய்து உணவுப் பாதுகாப்புத் துறையின் மூலம் அபராதம் விதிக்கப்பட்டது.

தொடர்ந்து, அந்த பகுதியில் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சௌ.சங்கீதா, ஆய்வு செய்த போது, தமிழக அரசால் தடை செய்ய பட்ட பாலீத்தீன் பை வைத்திருந்த கடையின் உரிமையாளருக்கு ரூபாய் 2000/ அபராதமும், சுகாதார குறைபாடு உள்ள ஒரு கடையின் உரிமையாளருக்கு ரூபாய் 1000/ அபராதமும் விதிக்கப்பட்டது. மேலும், அப்பகுதிகளில் நடத்தப்படும் கடைகளில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறதா என்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சௌ.சங்கீதா, உணவு பாதுகாப்பு சட்ட விழிப்புணர்வு இலவச பயிற்சி முகாமில் கலந்து கொண்டு தெரிவித்ததாவது: சாலையோர வியாபாரிகள் மற்றும் சிறு வணிகர்களுக்கு உணவு பாதுகாப்பு துறையின் சார்பில் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டு வருகிறது. உங்கள் கடைகளை தேடி வருவோர்களுக்கு வழங்கப்படும் உணவுப்பொருட்களை தரமானதாகவும், கலப்படமில்லாததாகவும் வழங்க வேண்டும். மேலும், உங்கள் கடைகளை தேடி வருபவர்களை தங்கள் வீட்டுல் உள்ள குழந்தைகள் என்ற எண்ணத்தோடு அணுகினால் மட்டுமே நீங்கள் தரமான உணவுப் பொருட்களை வழங்க முடியும். கடைகளில் வாங்கி விற்கப்படும் பொருட்களையும் தரமான பொருளாக வாங்கி விற்க வேண்டும். தங்கள் கடைகளின் மூலம் தரமான உணவுப் பொருட்களை விற்பதால் கடைகளில் இலாபம் குறைவாக இருந்தாலும் தரமான உணவிற்காகவே தங்கள் கடைகளை அதிகமானோர் நாடி வரும்போது அதிக இலாபத்தைப் பெற முடியும். மேலும், சாலையோர வியாபாரிகள் மற்றும் சிறு வணிகர்கள் உணவு பாதுகாப்பு உரிமம் மற்றும் பதிவு சான்றிதழ் பெற்று கடைகளை நடத்த வேண்டும். பதிவுச் சான்றிதழ் பெறாமல் கடைகளை நடத்துவது சட்டத்திற்கு புறம்பானதாகும் என மாவட்ட ஆட்சித் தலைவர் மா. சௌ. சங்கீதா, தெரிவித்தார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் மா. சௌ.சங்கீதா, உணவு பாதுகாப்பு சட்ட விழிப்புணர்வு இலவச பயிற்சி முகாமில் (FOSTAC) கலந்து கொண்டவர்களுக்கு உணவு பாதுகாப்பு உரிமம் மற்றும் பதிவு சான்றிதழ் வழங்கினார். இந்த ஆய்வின் போது, நியமன அலுவலர் (உணவுப் பாதுகாப்புத் துறை) மரு.ஜெயராம பாண்டின், உதவி ஆட்சியர் (பயிற்சி) வைஷ்ணவி பால், உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கடற்கரை கிராமங்களில் அமைச்சர் லட்சுமி நாராயணன் பார்வை



புதுச்சேரி, நவ. 28-

புதுச்சேரி கடற்கரை கிராமங்களில் அமைச்சர் லட்சுமி நாராயணன் கடல் சீற்றத்தை பார்வையிட்டு ஆலோசனை நடத்தினார்.

பெங்கல் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மீன்வளத்துறை அமைச்சர் லட்சுமி நாராயணன், ராஜ்பவன் தொகுதி குருசுக்குப்பம், வைத்திக் குப்பம், முத்தியால்பேட்டை தொகுதி சோலை நகர், காலாப்பட்டு தொகுதிக் குட்பட்ட கடற்கரை மீனவ கிராமங்களான பிள்ளைச்சாவடி, சின்னக்காலாப்பட்டு, பெரிய காலாப்பட்டு, கணபதி செட்டிக் குளம் உள்ளிட்ட மீனவ கிராமங் களின் கடல் சீற்றத்தை பார்வையிட்டார். எம்.எல்.ஏ.,க்கள் கல்யாண சுந்தரம், பிரகாஷ்குமார், கலெக்டர் குலோத்துங்கன், பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் தீனதயாளன், கண் காணிப்பு பொறியாளர் பாலசுப்பிரமணியன், மீன்வளத்துறை இணை இயக்குனர் தெய்வசிகா மணி மற்றும் அதிகாரிகள் ஆகியோர் உடனிருந்தனர். அப்போது மீனவர் களை கடலுக்கு செல்ல வேண்டாம். கடலோரத்தில் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மீனவர்களை பாதுகாப்பான பகுதிக்கு செல்லுங்கள். படகுகளை பாதுகாப்பான பகுதியில் நிறுத்தி வைக்க ஆகும் செலவை மீன்வளத் துறை ஏற்கும் என, அமைச்சர் லட்சுமி நாராயணன் மீனவ மக்களிடம் தெரிவித்தார்.

# ஜெகதா பட்டினத்தில் மழையால் மீனவர்கள் பாதிப்பு



புதுக்கோட்டை, நவ. 28-

புதுக்கோட்டை மாவட்டம் கடலோரப் பகுதிகளில் தொடர் மழையால் மீனவர்கள் வீடுகளில் முடங்கினர், லட்சக்கணக்கான கருவாடுகள் சேதம் அடைந்துள்ளது. புதுக்கோட்டை மாவட்டம் சுற்றுவட்டார பகுதி மற்றும் கடலோர பகுதியான கோட்டைப்பட்டினம் மணமேல்குடி ஆர் புதுப்பட்டிணம் ஜோதா பட்டினம் பகுதியில் கடந்த சில நாட்களாக வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது இந்த நிலையில் வங்க கடலில் வடகிழக்கு திசையில் குறைந்த காற்றழுத்த தாழ்வு ஏற்பட்டு உள்ளதால் கடந்த மூன்று நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. காற்றழுத்த தாழ்வு மற்றும் மழையின் காரணமாக மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. இதனால் மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்க செல்லாமல் வீட்டிலேயே முடங்கினர் இந்த நிலையில் ஜெகதாப்பட்டினம் துறைமுகம் அருகே கருவாடுகள் காய வைக்க முடியாததால் பல லட்ச ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதால் மீனவர்கள் வேதனை அடைந்துள்ளனர்.

# காரைக்கால் மாவட்ட காவல்துறை சார்பில் அவசர எண் 112 ஆம்புலன்ஸ் சேவையை சீனியர் போலீஸ் சூப்பிரண்டு துவக்கி வைத்தார்



கரைக்கால், நவ. 28-

காரைக்கால் மாவட்ட காவல்துறை சார்பில், அவசர எண் 112 ஆம்புலன்ஸ் சேவையை, மாவட்ட சீனியர் போலீஸ் சூப்பிரண்டு சௌஜன்யா நேற்று மாலை துவக்கி வைத்தார்.

காரைக்கால் மாவட்ட பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, காரைக்கால் மாவட்ட காவல்துறை சார்பில், காரைக்கால் வடக்கு காரைக்கால் தெற்கு ஆகிய இரண்டு பகுதிகளுக்கு, அவசர எண் நம்ம 112 ஆம்புலன்ஸ் சேவையை, மாவட்ட சீனியர் போலீஸ் சூப்பிரண்டு சவுஜன்யா நேற்று மாலை துவக்கி வைத்தார். இதன் மூலம் இரண்டு காவல்துறையின் மொபைல் வாகனம் இரண்டு ஷிப்ட் முறையில் காவல்துறையின் வடக்கு, தெற்கு பிரிவுகளில் தொடர்ந்து அதி தீவிர கண்காணிப்பில் செயல்பட்டு தொடர்ந்து கண்காணிப்பில் ஈடுபடும். காவல்துறை கட்டுப்பாட்டு அறையின் அவசர எண் 112 அழைக்கப்பட்டவுடன் விரைவில் செயல்பட்டு சம்பந்தப்பட்ட இடத்திற்கு உடனே வந்து நடவடிக்கை எடுக்க இந்த சேவையை காரைக்கால் மாவட்ட பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு சீனியர் போலீஸ் சூப்பிரண்டு கேட்டுக் கொண்டுள்ளார். இந்நிகழ்ச்சியில் போலீஸ் சூப்பிரண்டு சுப்பிரமணியன்மற்றும் போலீசார் கலந்து கொண்டனர்.

# நல்லவாடு மீனவர்கள் குடியிருப்பில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை

## சபாநாயகர் செல்வம் அதிகாரிகளுடன் ஆலோசனை



புதுச்சேரி, நவ. 28-

புதுச்சேரியில் நல்லவாடு மீனவர்கள் குடியிருப்பு பகுதியை சபாநாயகர் மற்றும் கலெக்டர் பார்வையிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர்.

வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் வலுப்பெற்று, புயல் எச்சரிக்கையை சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக, புதுச்சேரியில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. துறைமுகத்தில், மூன்றாம் எண் புயல் கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

தவளக்குப்பம் அடுத்த நல்லவாடு புதுக்குப்பம் ஆகிய மீனவர்கள் குடியிருப்பு பகுதிகளை, சபாநாயகர் செல்வம், கலெக்டர் குலோத்துங்கன் பார்வையிட்டனர். பின்னர், புயல் மற்றும் மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கடற்கரை பகுதியில் உள்ள படகுகளை பாதுகாப்பாக நிறுத்தி வைப்பது, பொதுமக்களுக்கு பாதுகாப்பு மற்றும் தேவையான உதவிகளை வழங்குவது பற்றி அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர்.

இந்த ஆலோசனையின் போது பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் பாலசுப்ரமணியன், மீன்வளத்துறை அதிகாரிகள், அரியாங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் ரமேஷ் உடனிருந்தனர்.

# தென்காசியில் முதல்வரை கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்ட பாட்டாளி மக்கள் கட்சியினர் கைது



**தென்காசி, நவ. 28-**

அதானி மீதான லஞ்ச புகார் தொடர்பான விவகாரம் குறித்து பாமக நிறுவனர் மருத்துவர். ராமதாஸ் அறிக்கை வெளியிட்டிருந்தார். அந்த அறிக்கையில் அதானி தொடர்பான ஊழல் குற்றச்சாட்டுகளில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பெயரும் இடம் பெற்றிருப்பது குறித்தும், அதானியுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்திப்பு குறித்தும் அறிக்கை மூலம் கேள்வி கேட்டு இருந்தார், இந்த அறிக்கை குறித்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பிய போது மருத்துவர்.ராமதாசை கேளியாக பேசியுள்ளார். இதற்கு பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் அன்புமணி ராமதாஸ் உட்பட பல்வேறு தலைவர்கள் கண்டனம் தெரிவித்த நிலையில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை கண்டித்தும், தமிழக முதல்வர் மன்னிப்பு கேட்க வலியுறுத்தியும் தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெற்று வருகிறது. அதன்படி தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பு பாட்டாளி மக்கள் கட்சியின் வடக்கு மாவட்ட செயலாளர் சீதாராமன் தலைமையில் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு, மாநில துணைத் தலைவர்கள் அய்யம் பெருமாள் பிள்ளை, திருமலைக்குமாரசாமி யாதவ், மாவட்ட தலைவர் குலாம், கடையநல்லூர் சட்டமன்ற தொகுதி செயலாளர், ராஜேந்திரன், ஆலங்குளம் சட்டமன்ற தொகுதி செயலாளர் சங்கர நாராயணன், தலைவர் கிருஷ்ணன் தென்காசி சட்டமன்ற தொகுதி தலைவர் சுசிசுந்தர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தின்போது முதல்வரை கண்டித்து கண்டன கோஷங்களை எழுப்பினர். இந்த ஆர்ப்பாட்டத்தில், மாவட்ட துணைத் தலைவர் ஃபேமஸ் அப்துல் மஜித் வாசு ஒன்றிய செயலாளர் கணேச பாண்டியன் மாவட்ட சிறுபான்மை பிரிவு தலைவர் கெய்சர் அலி, தென்காசி நகர செயலாளர் சங்கர நாராயணன், ஒன்றிய செயலாளர்கள் சண்முகசுந்தரம், கருப்பசாமி, செங்கோட்டை கிழக்கு ஒன்றிய தலைவர் சீவலநல்லூர் இசக்கி அச்சன்புதூர் பேரூர் செயலாளர் பக்கீர் மைதீன் செங்கோட்டை ஒன்றிய செயலாளர் சாமுவேல் பாப்பாக்குடி ஒன்றிய செயலாளர் சிவன் ராஜ் முதலியார் பட்டி கிளை செயலாளர் மாரியப்பன் தென்காசி மாவட்ட இளைஞர் அணி தலைவர் திருமலை குமார் விகே புதூர் பண்டாரம், மாசாணம் மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதனிடையே அனுமதி இல்லாமல் போராட்டத்தில் ஈடுபட்டதாக கூறி பாட்டாளி மக்கள் கட்சியினர் 20 க்கும் மேற்பட்டோரை தென்காசி காவல் துறையினர் கைது செய்து தனியார் திருமண மண்டபத்தில் அடைத்தனர்.

# இருளர் பழங்குடியினர் மக்களுக்கு சாதிச் சான்றிதழினை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்



**விழுப்புரம், நவ. 28-**

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில், திருவெண்ணெய்நல்லூர் வட்டம் டி.எடையார் கிராமத்தினைச் சேர்ந்த இருளர் பழங்குடியினர் மக்களுக்கு சாதிச் சான்றிதழினை மாவட்ட ஆட்சித்தலைவர் பழனி வழங்கினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின்படி பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திடும் வகையில், மின்னணு குடும்ப அட்டை ஆதார் அட்டை, சாதிச் சான்றிதழ் இருப்பிடச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், இலவச வீட்டுமனைப் பட்டா, கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் வீடு வழங்குவது போன்ற பல்வேறு துறை சார்ந்த அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் வனத்துறை அமைச்சர் அறிவுறுத்தலின்படி, இன்றைய தினம், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில், திருவெண்ணெய் நல்லூர் வட்டம், டி. எடையார் கிராமத்தினைச் சேர்ந்த 28 இருளர் பழங்குடியினர் மக்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்கப்பட்டது. மேலும், டி.எடையார் கிராமத்தில் குடிசைகளில் வசிக்கும் இருளர் என்ற பழங்குடியின மக்களுக்கு துறை சார்ந்த அலுவலர்கள் மூலம் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின்கீழ், வீடு கட்டிக்கொடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் பழனி தெரிவித்தார். இந்நிகழ்வில் விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் முருகேசன் திருவெண்ணெய் நல்லூர் வருவாய் வட்டாட்சியர் செந்தில் குமார் உட்பட பலர் உடனிருந்தனர்.

# 75வது இந்திய அரசியலமைப்பு தின விழா



**புதுக்கோட்டை, நவ. 28-**

இந்திய அரசியலமைப்பு தினத்தை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்ட நேரு யுவகேந்திரா மற்றும் ஸ்ரீ பாரதி கல்வி நிறுவனங்கள் இணைந்து நடத்திய இளையோர் நடைபயணம் பேச்சு மற்றும் பாட்டுப்போட்டி அரசியல் சாசன முகவுரை வாசித்தல் ஆகிய முப்பெரும் விழா கைக்குறிச்சி ஸ்ரீ பாரதி கல்வி நிறுவனங்கள் வளாகத்தில் நடைபெற்றது.

ஸ்ரீ பாரதி கல்வியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற அரசியல் சாசன முகவுரை வாசித்தல் மற்றும் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழாவிற்கு ஸ்ரீ பாரதி கல்வி நிறுவனங்களின் மேலாண்மை இயக்குனர் தனசேகரன் தலைமை தாங்கினார் நேரு யுவகேந்திராவின் திட்ட உதவி அலுவலர் நமச்சிவாயம் விழா நோக்க உரை ஆற்றினார் விழாவில் மாவட்ட குழந்தைகள் நலக்குழு தலைவர் சதாசிவம் மற்றும் உறுப்பினர் சுவாமிநாதன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர் நேரு யுவகேந்திராவின் மாவட்ட ஆலோசனைக் குழு உறுப்பினர் சரவணக்குமார் போட்டிகளில் வெற்றி பெற்றோர் அனைவருக்கும் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கி பாராட்டினார், தொடர்ந்து நடைபெற்ற அரசியல் அமைப்பு தின இளையோர் நடைபயணத்தில் நேரு யுவகேந்திராவின் இளையோர் மகளிர் மன்றத்தினருடன் ஸ்ரீ பாரதி கல்வியியல் கல்லூரி கலை அறிவியல் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரி ஆகிய நிறுவனங்களில் பயிலும் மாணவியர் சுமார் 400 பேர் கலந்து கொண்டனர். இந்த நடைபயணத்தை தனசேகரன் தொடங்கி வைத்து பங்கேற்றார் மேலும் இந்த நடை பயணத்தில் கல்லூரி முதல்வர்கள் மற்றும் பேராசிரியர்கள் பிற அலுவலர்கள் பலரும் பங்கேற்று சிறப்பித்தனர் முன்னதாக விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் ஸ்ரீ பாரதி கல்வியியல் கல்லூரி முதல்வர் சந்திரமோகன் வரவேற்றார் நிறைவாக பேராசிரியர் பரமேஸ்வரி அனைவருக்கும் நன்றி கூறினார் விழா ஏற்பாடுகளை நேரு யுவ கேந்திராவின் தேசிய இளையோர் தொண்டர்கள் லாவண்யா பவித்ரா மற்றும் கோபி ஆகியோர் சிறப்பாக செய்திருந்தார்கள்.

## கடையம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா



**தென்காசி, நவ 28-**

திமுக இளைஞரணி செயலாளரும், தமிழக துணை முதல்வருமான உதயநிதிஸ்டாலின் பிறந்தநாள் விழா தென்காசி மாவட்டம் கடையம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் கொண்டாடப்பட்டது. ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார் அறிவுறுத்தலின் பேரில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டு, பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் தமிழ்செல்வன், ஒன்றிய அவைத்தலைவர் பக்கீர்மைதீன், துணை செயலாளர்கள் வின்செண்ட், முல்லையப்பன், பொருளாளர் சுடலைமுத்து, மாவட்ட பிரதிநிதிகள் முகமது யாகூப், அய்யன்சாமி, பெருமாள் சுந்தரம், முன்னாள் பொறுப்புக்குழு உறுப்பினர் புகாரிமீரா சாகிப், முன்னாள் பஞ்சாயத்து தலைவர் அர்ஜுனன் சங்கர பாண்டியன், மகளிரணி மாவட்ட துணை அமைப்பாளர் சுந்தரிமாரியப்பன், அமைப்பு சாரா தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் ஜெயசிங், தொழிலாளரணி துணை அமைப்பாளர் கருணா, கிளை செயலாளர் காந்தி, மருதப்பன், முருகன், முத்தையா, அழகியநம்பி, கடையம் சுரேஷ், கோபாலகிருஷ்ணன், ராஜபாண்டி, தங்கராஜ், எவர்கிரீன் தங்கம், கோபி, சங்கர், மருதப்பன், பயஸ்ராய், கணேசன், பிச்சையாண்டி, சந்திரன் கடையம் சுரேஷ், கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# உதயநிதி ஸ்டாலினுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சிவா பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்



தமிழ்நாடு துணை முதல்வர், திமுக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை குறிஞ்சி இல்லத்தில் புதுச்சேரி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா சந்தித்து பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். உடன், திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.செந்தில்குமார், எல்.சம்பத் மற்றும் நிர்வாகிகள் இருந்து வாழ்த்து தெரிவித்தனர்.

# தனசுந்தராம்பாள் சார் டேபிள் சொசைட்டி தன்னார்வலர்கள் அறம் சேவாரத்தனா விருது பெற்றது



**புதுச்சேரி, நவ. 28-**

சென்னையில் அறம் செய்ய விரும்பு அறக்கட்டளை சார்பாக தேனாம்பேட்டை நாரத கனக சபாவில் நடைபெற்ற விழாவில் சமூகப் பணியில் சிறந்து விளங்கும் பல்வேறு நபர்களுக்கு விருது வழங்கப்பட்டது. இதில் பூரணாங்குப்பம் தனசுந்தராம்பாள் சாரிடபிள் சொசைட்டி தன்னார்வலர்கள் "பூரணாங்குப்பம் பனை ஆனந்தன்" அவர்களுக்கு "டோன்ட் வேஸ்ட் ஃபுட் ஸ்டீபன் ராயப்பா " அவர்களுக்கு அறம் சேவை செம்பல் விருது வழங்கி சிறப்பித்தார்கள். விருதினை திரைப்பட நடிகர் இயக்குனர் பாக்யராஜ், சின்னத்திரை நடிகர் ஈரோடு மகேஷ், அறம் அறக்கட்டளை நிர்வாகி நல்லமணி ஆகியோர் வழங்கினார்கள்.

# தமிழக அரசின் திட்டங்கள் குறித்து புகைப்பட கண்காட்சி



மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம் குட்டி மேய்க்கிபட்டி ஊராட்சி மன்றத்தில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பாக தமிழக அரசின் சாதனை திட்டங்கள் குறித்து விளக்கம் சிறு புகைப்பட கண்காட்சி நடைபெற்றது. கண்காட்சியை பொதுமக்கள் கண்டுகளித்து மகிழ்ந்தனர்.

# விழுப்புரத்தில் பாமக ஆர்ப்பாட்டம்



விழுப்புரம் பாமக வழக்கறிஞர் சார்பில் நீதிமன்ற வளாகத்தின் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

# உளுந்தூர்பேட்டை ஏழுமலையான் கோயிலில் அன்னதானம் மணிமண்டபம் கட்டும் பணி

## எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அடிக்கல் நாட்டினார்



**உளுந்தூர்பேட்டை, நவ. 28-** கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் திருப்பதி ஏழுமலையான் வெங்கடேஸ்வர பெருமாள் கோவில் உளுந்தூர்பேட்டையில் ஏழுமலையான் கோவில் கட்டப்பட்டு வரும் நிலையில் அதில் அன்னதானம் மணிமண்டபம் கட்டுவதற்கு முன்னாள் முதலமைச்சர் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில் முன்னாள் உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் குமரகுரு கள்ளக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் உளுந்தூர்பேட்டை ஒன்றிய கழகச் செயலாளர் செண்பகவேல் மற்றும் காந்தளவாடி பாக்கியராஜ் ஒன்றிய நகர கிளைக் கழக செயலாளர்கள் கட்சி தொண்டர்கள் பொதுமக்கள் ஏராளமாக கலந்து கொண்டனர்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
● வியாழன் ● நவம்பர் 28, 2024
மாலை எக்ஸ்பிரஸ்

# உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஆய்வையொட்டி மதுரை சமயநல்லூர் சாலையில் ஆக்கிரமிப்பு அகற்றம்





**மதுரை, நவ. 28–**

உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஆய்வையொட்டி மதுரை சமயநல்லூர் சாலையில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது.

பரவையை சேர்ந்த செந்தில்குமார் என்பவர் திண்டுக்கல் ரோடு சமயநல்லூர் பரவை பகுதிகளில் விபத்துக்களை தடுக்க நடவடிக்கை எடுக்க நெடுஞ்சாலை துறை மற்றும் மதுரை எஸ்பி க்கு உத்தரவிட வேண்டும் என்று மதுரை உயர்நீதிமன்ற கிளையில் மனுத்தாக்கல் செய்தார்.

மனுவை விசாரித்த உயர் நீதிமன்ற மதுரை கிளை நீதிபதிகள் எம்எஸ் ரமேஷ் ஏடி மரியா கிளிட் அமர்வு விபத்துகளை தடுக்க தாக்கலான வழக்கில் அப்பகுதியை நாங்கள் வருகின்ற நவம்பர் 29ஆம் தேதி ஆய்வு செய்ய உள்ளோம் என்று உத்தரவிட்டனர்.

அதன் அடிப்படையில் நெடுஞ் சாலைத்துறை கோட்ட பொறியாளர் மோகன காந்தி உத்தரவின்படி உதவி கொண்ட பொறியாளர் ஆனந்த் உதவி பொறியாளர் சக்திவேல் சாலை ஆய்வாளர் ஆரோக்கியன் போக்குவரத்து காவல் ஆய்வாளர் கணேஷ்ராம் மாநகராட்சி உதவி பொறியாளர் கண்ணன் நில அளவையர் ரகுபதி உட்பட அரசு அதிகாரிகள் அலுவலர்கள் திண்டுக்கல் சாலையில் பாத்திமா கல்லூரி முதல் சமயநல்லூர் வரை ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

## பெருமாள் ஏரியில் நீர் இருப்பினை ஆட்சியர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்



வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பூவாணிக்குப்பம் பெருமாள் ஏரியில் நீர் இருப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

## மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கை மனுக்களை பெற்ற ஆட்சியர்



திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளின் பல்வேறு கோரிக்கை மனுக்களை அவர்களின் இருப்பிடத்திற்கே சென்று மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்திகேயன் பெற்றுக் கொண்டார்கள்.

# கலசலிங்கம் சட்டக் கல்லூரியில் குடியுரிமை தினம்



**ஸ்ரீவில்லிபுத்தூர், நவ. 28–**

ஸ்ரீவில்லிபுத்தூர் கலசலிங்கம் பல்கலை, சட்டக் கல்லூரி சார்பில் 75வது குடியுரிமை தின விழா வேந்தர் முனைவர் கே ஸ்ரீதரன் தலைமையில் நடைபெற்றது. துறைத் தலைவர் பாரதி வரவேற்று, அரசியல் அமைப்பு சட்ட முக்கியத்துவம் பற்றி விவரித்தார். துணை தலைவர் முனைவர் எஸ்.சசி ஆனந்த், துணைவேந்தர் முனைவர் எஸ்.நாராயணன், பதிவாளர் முனைவர் வி.வாசுதேவன் முன்னிலை வகித்தனர். விருதுநகர் மாவட்ட முதன்மை நீதிபதி கே.ஜெயகுமார் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி பேசினார்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# வயதானவர்களின் நலன் கருதி மக்களை தேடி மருத்துவம் திட்டத்தை கொண்டு வந்த முதல்வர்

## நெல்லை மாவட்ட பயனாளிகள் நெஞ்சார்ந்த நன்றி



**நெல்லை, நவ. 28–**

பொது சுகாதாரத் துறையின் மூலம் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினால் 5.8.2021 அன்று கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் ஆரம்பகால சுகாதாரப் பராமரிப்பு முறையை மாற்றும் மற்றும் அத்தியாவசிய மருத்துவ சேவைகள் ஏழைகளுக்கு எளிதில் அணுகக்கூடிய வகையில் வீடு வீடாக சென்று சோதனை மேற் கொள்ளப்பட்டு, மருத்துவ மனைகளுக்கு வர முடியாதவர்களுக்கும். மருத்துவத்தை வீடுகளுக்கு கொண்டு சேர்ப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

குறிப்பாக, 45 வயதிற்கு மேற்பட்டவர்கள். முதியவர்கள், சத்துக்குறைபாடு உடையவர்கள். மாற்றுத்திறனாளிகள் என பல்வேறு உடல்நலக்குறைவு உள்ளவர்களை கண்டறிந்து அவர்களின் வீடுகளுக்கு சென்று சோதனை செய்வதன் மூலம் சிகிச்சைக்கான மாதாந்திர மருந்துகள் அவர்களின் வீடுகளுக்கு சென்று வழங்கப்பட்டு வருகிறது. இதேபோல், பிசியோதெரபி சிகிச்சை தேவைப்படும் நபர்களுக்கும் அவர்களின் வீடுகளுக்கு சென்று சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் 9 மருத்துவ வட்டாரம் மற்றும் திருநெல்வேலி மாநகராட்சியில் மக்களைத்தேடி மருத்துவம் திட்டத்தில் 124 மருத்துவ அலுவலர்கள், 70 செவிலியர்கள், 41 ஆய்வகநுட்பனர், 38 மருந்தாளுனர்களும், 98 இரண்டாம்நிலை கிராம சுகாதார செவிலியர்கள், 254 பெண் சுகாதார தன்னார்வலர்கள் மூலம் சிகிச்சை பெறுவர்களின் இல்லங்களுக்கு நேரில் சென்று சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகிறது. மற்றும் வலிநிவாரண சிகிச்சைக்கு 11 செவிலியர்கள் மற்றும் 11 இயன்முறை சிகிச்சையாளர்கள் மூலம் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் வீட்டிற்கு சென்று





தொற்று அல்லது தொற்றா நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம், உயர் ரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு, இவை இரண்டும் கிராமங்களில் பெரிதும் கண்டறியபட்டு வருகிறது. அதன் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் மக்களைத்தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் 18 வயதிற்கு மேல் உள்ள அனைத்து மக்களுக்கும் தொற்றா நோய்கான பரிசோதனை செய்யப்பட்டு உயர் இரத்த அழுத்தத்திற்கு 2,52,242 பயனாளிகளும் நீரிழிவு நோய்க்கு 1,19,449 பயனாளிகளும் மற்றும் உயர் ரத்த அழுத்தத்துடன் நீரிழிவு நோய் உள்ள 1,13,316 பயனாளிகளும், வலிநிவாரண சேவையில் 14.536 பயனாளிகளும், உடற்பயிற்சி அமர்வுகளுக்கு 15,112 பயனாளிகளுக்கும் மற்றும் 12 பயனாளிகளுக்கு பெரிட்டோனியல் டயாலிசிஸ் பைகள் என மொத்தம் 5,14,667 பயனாளிகளுக்கு மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் வீட்டிற்கு சென்று சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் திருநெல்வேலி வட்டம். சீதபற்பநல்லூர் பெரியார் சமத்துவபுரத்தில் பயனடைந்த பயனாளிகளின் இல்லத்திற்கு மாவட்ட சுகாதார அலுவலர் மருத்துவர் கீதாராணி நிறைந்தது மனம் குறித்து பயனாளிகளிடம் நேரில் சென்று இத்திட்டத்தின் பயன்கள் குறித்து கேட்டறிந்தார்.

நிறைந்தது மனம் நிகழ்வில், மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் பயனடைந்த பயனாளிகள் தெரிவித்ததாவது

திருநெல்வேலி வட்டம், சீதபற்பநல்லூர் பெரியார் சமத்துவபுரத்தில் நீரிழிவு நோய்க்கு சிகிச்சை பெற்று பயனடைந்து வரும் செல்வராஜ் (65) தெரிவித்ததாவது; பெரியார் சமத்துவபுரம் 1 தெருவில் வசித்து வருகிறேன். எனக்கு நீரிழிவு நோய் கடந்த 2 வருடமாக இருக்கிறது. மக்களைத் தேடி மருத்துவத்தின் மூலமாக பெண் தன்னார்வலர்கள் பரிசோதனை செய்து மாத்திரைகள் வழங்கி வருகிறார்கள். மேலும், கடந்த 2 மாதங்களாக வலது காலில் நீரிழிவு நோய் காரணமாக காயம் ஏற்பட்டு ஆறாமல் இருந்தது. அதற்கு செவிலியர்கள் வீட்டிற்கு வந்து காயம் சரியாகும் வரை மருந்து போட்டு சிகிச்சை அளிப்பதோடு, பராமரிப்பு குறித்து அறிவுரைகள் வழங்கினார்கள்.

வயதான காலத்தில் மருத்துவ மனைக்கு சென்று சிகிச்சை பார்க்க முடியாமல் இருக்கும் என்னை போன்றவர்களுக்கு மக்களை தேடி மருத்துவம் திட்டம் மிகவும் உதவியாக இருக்கிறது. இத்தகைய திட்டத்தை செயல்படுத்திய தமிழ்நாடு முதலமைச்சருக்கும், தமிழ்நாடு அரசிற்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டத்தில், திருநெல்வேலி வட்டம், சீதபற்பநல்லூர் பெரியார் சமத்துவபுரம் மேலத்தெருவில் வசித்து வரும் ஆன்டனி (77) மக்களை தேடி மருத்துவம் திட்டத்தினால் தெரிவித்ததாவது; நான் சமத்துவபுரம் மேலத் தெருவில் வசித்து வருகிறேன். கடந்த 20 வருடங்களாக ரத்த கொதிப்பு நீரிழிவு நோய் மற்றும் பாதிக்கப்பட்டு படுத்த பக்கவாதத்தினால் படுக்கையாக இருந்தேன். கடந்த 3 ஆண்டுகளாக மக்களைத் தேடி மருத்துவத்தின் எனக்கு பரிசோதனை செய்து வீட்டிற்கே வந்து மாத்திரைகள் வழங்கி வருகிறார்கள். மேலும், பிஸியோதெரபிஸ்ட் மற்றும் செவிலியர்கள் மாதம் தோறும் வீட்டிற்கு வந்து உடற்பயிற்சிகளை வழங்கி சிகிச்சை அளிக்கிறார்கள் இதனால் என் உடல்நிலை முன்னேற்றம் அடைந்து பேசவும், வீட்டிற்குள் நடக்கவும் முடிகிறது.

பல ஆண்டுகளாக படுக்கையில் இருந்த எனக்கு மருத்துவமனைக்கு செல்வதற்கும் மருந்து வாங்குவதற்கும் சிரமப்பட்டு வந்தேன். மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் எனக்கு இலவசமாக மருந்து கிடைக்கிறது. மேலும், நோயும் குறைந்து நடமாடும் நிலைக்கு வந்ததற்கு இத்திட்டத்தினை கொண்டு வந்த தமிழ்நாடு முதலமைச்சருக்கும், எனக்கு சிகிச்சை வழங்கும் மருத்துவ துறையினருக்கும் கோடான கோடி நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

வெளியீடு:–
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
திருநெல்வேலி மாவட்டம்.

## பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் வழங்கினார்



தூத்துக்குடி மாவட்டம் ஏரல் வட்டம், சிவகளை ஊராட்சி சென்னை வாழ் சிவகளை இந்து நாடார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் பல்வேறு அரசுத்துறைகளின் சார்பில் 74 பயனாளிகளுக்கு ரூ.53.02 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத் வழங்கினார். உடன் திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் சே.சுகுமாறன், இணை இயக்குநர் (வேளாண்மை) பெரியசாமி, சிவகளை ஊராட்சி மன்றத் தலைவர் ம.பிரதீபா ஆகியோர் உள்ளனர்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007

# சவால்களை சந்திக்கும் திறன் ராணுவ வீரர்களிடம் உள்ளது: ஜனாதிபதி





# எம்.பி.யாக பதவியேற்றார் பிரியங்கா காந்தி

# நாளை மறுநாள் தமிழ்நாட்டில ரெட் அலர்ட்


# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

Website: www.maalaiexpress.com

• 28-11-2024 வியாழக்கிழமை •வெளியூர்: 29-11-2024 வெள்ளிக்கிழமை •பக்கம் 6 • ரூ.600 காசுகள்